தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 95, மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. பெரியசாமி, மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.

95—

நேரடி கொள்முதல் நிலையக் கட்டடம்

***22222—திரு. இ. பெரியசாமி:**

மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூரில் நேரடி நெல் கொள்முதல் நிலையக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையினை இப்பேரவைக்கு அளிக்கின்றேன்.

(அ) மற்றும் (ஆ) திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூரில் நடப்பு நெல் கொள்முதல் பருவத்தில் வாடகைக் கட்டடத்தில் துவங்கப்பட்ட நெல் கொள்முதல் நிலையத்திற்கு நெல் வரத்து ஏதும் இல்லாததால் ஆத்தூர் நெல் கொள்முதல் நிலையம் விளாம்பட்டிக்கு மாற்றப்பட்டுள்ளது. எனவே, இந்நிலையில் இங்கே நிரந்தர நேரடி நெல் கொள்முதல் நிலையக் கட்டடத்தைக் கட்ட வேண்டிய அவசியம் ஏற்படவில்லை என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. பெரியசாமி அவர்கள் இருக்கையில் இல்லை.

வினா வரிசை எண் 96, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.எஸ். சரவணன், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.